# பன்முகக் கலைஞர் டீன் குமார்

## ஆழத்து முத்துக்கள் 164

- தெளிவத்தை ஜோசப் -

இலங்கைத் தமிழ் நாடகத் துறையில் குறிப்பாகத் தலை நகர் கொழும்பின் தமிழ் நாடகத்துறையில் 60களுக்குப்பின் ஒரு நடிகராக நாடகத் தயாரிப்பாளராக நெறியாளராகத் திகழ்ந்தவர் டீன்குமார்.

கட்டுமஸ்த்தான உடல் கட்டழகுத் தோற்றம் கரகரப்பற்ற கணீர்க்குரல் எந்தப் பாத்திரமானாலும் சோடையுறாமல் ஏற்று நடிக்கும் திறன் அனைத்தும் கொண்டவர் இவர்.

கொழும்பு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் 1965ல் மேடையேறிய 'கலையும் கண்ணீரும்' நாடகமே இவரது அரங்கியல் துறையின் ஆரம்பம்.

தினகரன் நாடக விழா கொழும்பில் அறுபதுகளில் நடந்தபோது ''மனித தர்மம்'' என்னும் நாடகத்தை மேடை ஏற்றினார் டீன்குமார்.

அந்தனி ஜீவாவின் 'அக்கினிப்பூக்கள்' நாடகம் மலையகத் தொழிலாளர், தொழிற்சங்கம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு உருவான நாடகம். இதன் முக்கிய கதாபாத்திரம் தொழிற்சங்கத் தலைவர் இந்நாடகத்தின் முதல் அரங்கேற்றத்தின் போது இந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் ஸ்ரீசங்கர் அவர்கள். அடுத்த மேடையேற்றத்தின்போது டீன்குமார் இந்தப் பாத்திரத்தை ஏற்று வெற்றிகரமாக நடித்தார்.

கொழும்பிலும் மலையகத்திலும் பல தடவைகள் மேடையேறிய அக்கினிப்பூக்கள் டீன்குமாரைப் பரவலாகப் பேச வைத்தது. பிறகு பிறகான மேடையேற்றங்களின் போது கலைஞர் மோகன் குமாரும் இந்தப் பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்.

டீன்குமார் அவர்கள் மேடையேற்றிய 'ஒரு மனிதன் இரு உலகம்' என்னும் நாடகம் நாடக உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நாடகமாகும். நாடகத்தில் நடிக்க பெண்கள் முன்வராத ஒரு கால கட்டத்தில் நடிகைகளாக ஆண்களே பெண் வேடமிட்ட அந்த நாட்களில் நிறைய பெண் பாத்திரங்களுடன் நிறையவே பெண்களை மேடையேற்றிக்காட்டினார். இவர் இந்த நாடகத்தை கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று பல இடங்களில் மேடை ஏற்றிக்காட்டினார் டீன் குமார்.

நடிகைகளுக்கு பஞ்சம் நிலவிய அக்காலத்திலேயே 16 பெண்களை இந்த நாடகத்தில் நடிக்க வைத்தவர் இவர் என்று குறிக்கின்றார் தம்பிஐயா தேவதாஸ்.

எழுபதுகளுக்குப் பின் சிலிர்த்துக் கொண்டு எழும்பிய இலங்கைத் திரைப்படத்துறையை ஆட்கொண்டவராகத் திகழ்ந்தவர் டீன்குமார்.

1975ல் ஒரு பரபரப்புடனும் பரவலான விளம்பர யுக்திகளுடனும் வெளிவந்த புதிய காற்று இவர் நடித்த முதல் படம். கதாநாயகன் வி.பி.கணேசனின் தம்பியாக நடித்தவர் டீன்குமார். ஏறக்குறைய வில்லன். இந்தப் பாத்திரத்தை கதாநாயகனை விடவும் முக்கியமானதாக மாற்றிக்காட்டிய திறமை டீன் குமாருடையது. 'புதிய காற்று' பற்றிப் பேச வருபவர்கள் முதலில் இவர் பற்றித்தான் பேசத் தொடங்குவார்கள். இவரின் காதலியாக இவருக்கு ஜோடியாக நடித்தவர் சிங்களத் திரையுலகின் பிரபல நட்சத்திரமான வீணாகுமாரி.



டீன் குமாருக்கு இது முதல் படம். வீணாகுமாரியோ கேமரா அனுபவம் நிறைய கொண்டவர். இருந்தும் கூட அவருக்கு ஈடுகொடுத்து ஒரு அநாயாசத்துடன் நடித்தவர் இவர்.

புதியகாற்று திரைப்படத்தின் 50வது நாள் வெற்றி விழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்ட போது விழாவுக்குத் தலைமை தாங்கிய அப்போதைய தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவராய் இருந்த அமரர் கதிர்வேற்பிள்ளை அவர்கள் இலங்கைக் கலை உலகின் விடிவெள்ளி டீன்குமார் என்று புகழாரம் சூட்டினார்.

1975ல் புதியகாற்றில் நடித்துப் பெயர் பெற்ற இவர் 1978ல் திரைக்கு வந்த 'தென்றலும் புயலும்' படத்தில் ஒரு முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தார்.

தயாரிப்பாளர் டொக்டர் எஸ்.ஆர். வேதநாயகம் முதல் போட்டு உதவியவர் பட்டதாரியும் பேங்க் மெனேஜருமான சிவபாதவிருதையர். இருவரும் திருகோணமலைக் காரர்கள். திருகோணமலைப் பிரதேசங்களில் பலமுறை மேடையேறிய நாடகமே தென்றலும் புயலும். திருகோணமலை நாடகங்களில் நகைச்சுவை நடிகராகவும் கலை இலக்கியச் செயற்பாட்டாளராகவும் வரிசையாக நூல்களை வெளியிட்ட வெளியீட்டாளராகவும் திகழ்ந்த சித்தி அமரசிங்கமும் இவர்களுடன் இணைந்து கொண்டார். இம்மூவரும் படத்தில் நிறையவே காட்சிகளில் தோன்றினர். தென்றலும் புயலும் நாடகத்தை திரைக்கேற்ற விதத்தில் திரைக்கதை வசனம் அமைத்தவர் தயாரிப்பாளர் வேதநாயகம் அவர்கள்.

கே.ஏ.ஜவாகர், ஜோபு நசீர், எஸ். என். தனரத்தினம், சந்திரகலா, ஹெலன்குமாரி, செல்வம் பெர்னாண்டோ போன்ற முக்கிய நடிகர்கள் பங்கேற்ற படம் இது. 1978ம் ஆண்டின் சிறந்த துணை நடிகைக்கான ஜனாதிபதி விருதினை செல்வம் பர்னாந்துவுக்கு பெற்றுக்கொடுத்த படம் தென்றலும் புயலும்.

இந்தப் படத்துக்கு விமர்சனம் எழுதிய வீரகேசரி வேதநாயகம், சிவபாத விருதையர், அமரசிங்கம் ஆகியோர் படத்தை ஆக்கிரமித்திருந்தாலும் மக்கள் மனதில் நிற்பவர் ஒரு சில காட்சிகளிலேயே தோன்றி நடித்த 'டீன்குமாரே' என்று எழுதியிருந்தது.

'தெய்வம் தந்த வீடு' (1978) இவர் நடித்த மூன்றாவது படம். ஏ. ரகுநாதன், சந்திரகலா, றேலங்கி செல்வராஜா, விஸ்வநாதராஜா, ஜவாகர், தனரத்னம், ஜெயதேவி, நெய்னார் என்று நிறைய பேர் நடித்த படம் இது. டீன் குமார் ஏற்றிருந்தது வில்லன் வேடம்.

இவர் நடித்த நான்காவது படம் நெஞ்சுக்கு நீதி (1980). தென்னிந்திய நடிகர் ஸ்ரீகாந்த், ஏ.ரகுநாதன், கே.ஏ.ஜவாகர், எஸ்.ராமதாஸ், கலைச்செல்வன், டொன்பொஸ்கோ, பரினாலை, ஹெலன்குமாரி போன்றோர் நடித்த படம் இது.

ஷர்மிளாவின் இதயராகம் படத்தைத் தயாரித்த பேராதனை ஜுனைதீனே நெஞ்சுக்கு நீதி திரைக்கதை வசனத்தையும் எழுதியவர். டீன்குமாருக்கு ஜோடியாக நடித்தவர் பரினாலே. சிங்களப்படங்களில் நடனமாதாக விளங்கிய அழகான பரினாலை தமிழ்த்திரைப்படங்களில் கதாநாயகி அந்தஸ்து பெற்றவர். புதியகாற்று கதாநாயகியும் இவரே.

டீன்குமார் நடித்த 5வது திரைப்படம் 'அவள் ஒரு ஜீவநதி'.


கொழும்பின் அரங்கியல் துறையில் நீண்டகால அனுபவமும் தனக்கெனத் தனியான அடையாளமும் கொண்டவரான மாத்தளை கார்த்திகேசு தயாரித்த படம் இது.

ஜே.பி. றொபட் படத்தின் இயக்குனர். இருவருமாகச் சேர்ந்து தங்களது படத்துக்குத் தேர்ந்தெடுத்த கதாநாயகன் டீன் குமார். கதாநாயகியாகத் தெரிவுசெய்யப்பட்டவர் பரினாலே.

கே.எஸ்.பாலச்சந்திரன், ஏகாம்பரம், சிதம்பரம் போன்ற மற்றய நடிகர்களுடன் தயாரிப்பாளர் மாத்தளை கார்த்திகேசுவும் நடித்த படம் இது.

மேடை நாடகம், சினிமா, சிங்களச் சினிமா என்று பல்துறைக்கலைஞராகத் திகழ்ந்த டீன்குமார் நடித்த ஐந்தாவது படமும் கடைசிப்படமும் 'அவள் ஒரு ஜீவநதியே' ஆகும்.

இள வயதிலேயே இவருடைய மரணம் சம்பவித்தமை இலங்கைத் தமிழ்த்திரைப் படத்துறைக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பே ஆகும்.



theliwathai.joseph@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**